கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள், சென்னை – 6
பிறப்பிப்பவர்: முனைவர்(திருமதி)இரா.சாருமதி, எம்.எஸ்ஸி., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி.,

ந.க. எண்.எ4/41546/2017–2 நாள்.19 .12.2018

பொருள்: பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப்பணி – இவ்வியக்ககத்திற்கு தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி நான்கில் (2015–2016) தேர்வு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர்கள் பணியமர்த்தப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்– தொடர்பாக.

பார்வை:
1. தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலர் அவர்களின் கடித எண்.5831/ PSD-C1/2017, நாள்.27.09.2017
2. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.39738 /பி1/2017, நாள்.13.10.2017
3. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.41546 /எ4/2017, நாள்.20.10.2017
4. கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.39738/பி1/2017, நாள்.24.05.2018.

– – – – – – – –

பார்வை 1–இல் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணைய கடிதத்தில் 2015–2016 ஆண்டிற்கு தொகுதி 4–ல் தெரிவு செய்யப்பட்டு, இளநிலை உதவியாளர்களாக பணிபுரிய இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து பார்வை 2 (ம)3 –இல் காணும் கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களின் செயல்முறைகளின் படி கீழ்காணும் பணியாளர்களுக்கு பணிநியமன ஆணை வழங்கப்பட்டு இவ்வலுவலகத்தில் பணியில் சேர்ந்தனர்.

| வ.எண். | பெயர் மற்றும் பதவி திரு/திருமதி/செல்வி | இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| 1. | வெ.நரேஷ்குமார் | 25.10.2017 மு.ப |
| 2. | இரா.பாலன் | 25.10.2017 மு.ப |
| 3. | வே.சரவணன் | 25.10.2017 மு.ப |
| 4. | ப்பி.தீபன்குமார் | 01.11.2017 மு.ப |
| 5. | வெ.செல்வராஜ் | 06.11.2017 மு.ப |

பார்வை 4–இல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி, மேற்காண் பணியாளர்களுக்கு பணியில் சேர்ந்த நாள் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளை தெரிவித்து பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

"இப்பணிவரன்முறை தொகுதி IV 2015–2016 பணிநியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் உள்ள வழக்குகளில் வழங்கப்பட உள்ள இறுதி தீர்ப்பாணைக்குட்பட்டது."

அவர்கள் பணிவரன் முறை செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்றாண்டு தொடர்ச்சியான பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதி காண் பருவ காலத்தில் வைக்கப்படுவார் என்றும், இக்காலகட்டத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் மற்றும் பவானி சாகர் அடிப்படைப் பயிற்சி தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

கல்லூரிக் கல்வி இயக்குநர்

பெறுநர்:
சார்ந்த பணியாளர்கள்

நகல்:
1. பி பிரிவு
2. 'அ2' இருக்கை